# இனிமை இல்லம்




## குடும்பக் காலாண்டிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமை இல்லம்


இல்லம் : 07, டிசம்பர் : 2011, இனிமை : 9

இறையியலின் பின்னணியில்
இல்லத்திற்கு இனிமை சேர்க்கும்
ஒரு குடும்ப காலாண்டிதழ்.



**தொகுப்பாசிரியர்:-**

தா.பி.சுப்பிரமணியம்



வெளியீடு :-
குடும்ப பணிக்குழு
திருகோணமலை மறைக்கோட்டம்
மேய்ப்புப் பணி இல்லம்,
உப்புவெளி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!



இனிமை இல்லம் தனது

வாசக நெஞ்சங்களுக்கு

திவ்விய பாலன் பிறப்பினதும்

மலர்ந்துள்ள

புத்தாண்டினதும்

வாழ்த்துக்களைத்

தெரிவித்துக்கொள்வதில்

மகிழ்ச்சியடைகிறது!

## குடும்ப வாழ்வு பணித்துறைக் குழு

மேய்ப்புப் பணி நிலையம்

உப்புவெளி

திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்குநர் மனம் கனிந்து வாழ்த்துகிறார்.

கிறிஸ்துவின் உதயப் பெருவிழாவானது இறைவன் எம்மீது கொண்ட கருணைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவருடன் எமக்குள்ள அன்புறவைப் புதுப்பிப்பதாகவும் அமைகிறது.

இறைவன் தன் சாயலாகவே மனிதனைப் படைத்தாரென புனித விவிலியம் கூறுகிறது. எனவே எம்மை நேசிக்கும் அதே பாங்கில் எமது அயலவரை நேசிப்பதும் அவர்களுக்கும் கை கொடுப்பதும் இறைவனுக்கே செய்வது போல் ஆகிறது. இதிலிருந்து வாழ்க்கையென்பது பகிர்ந்து கொள்வதுதான் என்பது விளங்குகிறதல்லவா?

எனவே, சென்ற ஆண்டைப்போலவே புத்தாண்டிலும் எமது குடும்பப்பணித்துறையானது தங்கள் நட்பையும் ஒத்துழைப்பையும் தனது பணிகளுக்கு மேலும் கோரி நிற்கிறது.

இந்தக் கிறிஸ்மஸ் ஆனது கடந்தாண்டில் நாம் கடைப்பிடித்த அன்பு, சமாதானம், விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு போன்ற அருங்குணங்களிலும் அவற்றின் வெளிப்பாடான செயற்பாடுகளிலும் மிளிர்ந்ததுபோல, புத்தாண்டிலும் தொடரும் எமது மனிதநேயப் பணிகள் மூலம் இதரர்களுக்கு முன்மாதிரியாக திகழ வேண்டுமென ஆசிக்கிறோம். இந்த நந்நாளில் எமது பிரார்த்தனையும், வழிகாட்டுதலும் அதுவாகவே உள்ளது.

அருட்பணி அன்ரனி லீயோ,
இணைப்பாளர்,
குடும்ப வாழ்வு பணித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அர்ப்பண மணவாழ்வின் முன்னே அகம்பாவம் தோற்றுவிடும்!"

**திருமலை மறைக்கோட்டத்தில் மூத்த தம்பதிகளை கௌரவிக்கும் விழாவில் ஆயர் உரை**




"திருச்சபையின் குடும்ப ஆண்டு நிறைவெய்தப் போகும் இக்காலகட்டத்தில், ,இனிய இல்வாழ்வில் இணைந்து 60, 50, 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள தம்பதிகள் பலரை இங்கு காண்பதில் மனம் நிறைவடைகின்றது. மெய்விவாகத்திருச்சடங்கின் மூலம் இவர்களை இணைத்து வைத்த இயேசு இரட்சகரே இவர்களது வாழ்வின் இன்ப துன்பங்களிலும் இவர்களுடன் இணை பிரியாதிருந்து இவர்களது கரம் பற்றி வழி நடத்தி வந்திருக்கிறார் எனக் கூறுகையில் மனம் பெருமையால் பூரிக்கிறது. இத்தனை காலத்திற்கும் உங்கள் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள், துன்ப துயரங்கள், வீழ்ச்சி தாழ்ச்சிகளுக்கு மத்தியில் உங்களை பிரியவிடாது பிணைத்து வைத்திருந்தது எதுவென்று இவர்களிடம் கேட்டால், அன்பு அல்லது நேசம் என்பதைத் தவிர வேறொன்றையும் இவர்களுக்குச் சொல்லத் தெரியாது. ஒருவருக்காக ஒருவர் வாழ்வது என்று வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால், அதன் முன்னே பணமோ, பதவியோ, அகம்பாவமோ எடுபடாது. உண்மையான நேயத்தின் முன் அவை தோற்றுத் தொண்டுபட்டுவிடும்.!"

இவ்வாறு திருமலை-மட்டு மறைமாநில ஆயர் மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார். திருகோணமலை மறைக்கோட்டத்தின் குடும்பவாழ்வுப் பணித்துறையினர், திருச்சபை குடும்ப ஆண்டாக பிரகடனப்படுத்திய இவ்வாண்டின் நிறைவினையொட்டி திருமலை புனித மரியாள் பேராலயத்தில் கடந்த டிசம்பர் 4ம் திகதியன்று நடத்திய மூத்த தம்பதியினரைக் கௌரவிக்கும் விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்விதம் குறிப்பிட்டார்.



இவ்விழாவுக்கு திருச்சபையின் மெய்விவாக அருட்சாதனத்தின் மாட்சிமைக்குச் சான்றுபகரும் வண்ணம் இல்வாழ்வில் வைரவிழா, பொன்விழா, வெள்ளிவிழாக்கள் கண்ட தம்பதிகள் 17 சோடிகள் வரை அவர்களது வழித்தோன்றல்களுடன் பெரியகடைப் பேராலயம், சின்னக்கடை ஆலயம், பாலையூற்று, நிலாவெளி, சீனக்குடா ஆலயப் பங்குகளிலுமிருந்து வருகைதந்து விழாவிக்குச் சிறப்புச் சேர்த்தனர். திரு.பேர்க்கி மார்க்கஸ் என்பவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் இத்தம்பதிகளின் திருமணவாக்குத்தத்தங்கள் புதுப்பிக்கப்பட்டன.



திருகோணமலை மறைக்கோட்ட குடும்பவாழ்வுப் பணித்துறை இயக்குநர் அருட்பணி அன்ரனி லீயோ அடிகளார் அனைவரையும் வரவேற்று வாழ்த்துரை வழங்கினார். அவர் தமதுரையில், "குடும்பவாழ்வென்பது அன்பு செலுத்துவதிலும் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழ்வதிலுமே தங்கியுள்ளது. எமது திருச்சபையின் நிலைக்களனாகவும், இணைக்கும் கரங்களாகவும் குடும்பங்களே உள்ளன. உன்னதமான குடும்பங்களிலிருந்தே உத்தமமான பிரஜைகள் உருவாக்கப்படுகிறார்கள். திருச்சபைக்கு அத்திவாரமாகவும், அகலக்கைவிரித்து அக்குடும்பங்களை அணைத்துக் கொள்கிற வெண் கொற்றக்குடையாகவும் விளங்குகின்ற எமது இரட்சகரே இதற்குப் பிரத்தியட்சமான சாட்சி.

அவரின் செயற்பாடுகளால் அவர் உருவான, அல்லது அவரை உருவாக்கிய திருக்குடும்பம் மகிமை பெற்றது. உலகம் உள்ளவரை முன்னுதாரணம் காட்டிப் பேசப்படுகிற வரம் பெற்றது.

இங்கு விழாக் கொண்டாடுகிற ஒவ்வொரு குடும்பத்தையும் நோக்கினால், அவர்களது குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பங்களாகவும், நல்ல பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிய குடும்பங்களாகவும் இருக்கக் காண்கிறோம். அதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்". என்றார்.



நிகழ்வின் ஆரம்பத்தில் பேராலயப்பங்கு யுவதிகளின் நடனம், மற்றும் ஆரத்தியுடன் விழா நாயக நாயகியர் வம்பேர்க் அரங்கிலிருந்து மாலைமரியாதைகளுடன் ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டனர் பின்னர் பாலையூற்று, மற்றும் மூதூர் பங்கு மக்களின் முன்னுரையுடன் ஆயரின் தலைமையில் அருட்தந்தை லீயோ, அருட்தந்தை ஜோர்ஜ் திசநாயக்க ஆகியோரும் இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். பின்னர் தம்பதிகளுக்கு ஆயரால் குடும்ப ஆண்டு நினைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பின்னர் ஐக்கிய காலை விருந்தொன்றும் வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

தொகுப்பு தாபி.

## தொட்டில் பழக்கம்

வகுப்பில் ஒரு மாணவன் இருந்தான். உல்லாசம் என்ற பெயரில் பொய், களவு, சூதுவாது, போதையென்று உலகிலுள்ள அத்தனை கெட்ட பழக்கங்களையும் கற்று வைத்திருந்தான். இவைகளை யாராவது சுட்டிக் காட்டினால், அவர்களுக்கு அவன் கூறும் பதில்: "இந்த வயதில் இப்படி இவைகளை அனுபவிக்காவிட்டால் என்ன பிரயோசனம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் காலம் செல்லச் செல்ல தன்னாலேயே அவைகளை விட்டொழித்து விடலாம்'' என்பதே.

அவனது இந்த பழக்க வழக்கங்களையும், அவன் தன்னோடு நில்லாது மற்ற மாணவர்களையும் கெடவைக்க முயல்வதையும் கவனித்துக் கொண்டிருந்த அந்தப் பாடசாலை அதிபர். ஒரு நாள் அவனை அழைத்தார்.'' தம்பி, என்னுடன் வா, உனக்கொரு வேலை வைத்திருக்கிறேன்!'' என்றார். மாணவன் அவருடன் சென்றான்

அவனை அப்பாடசாலையின் பின்புறமிருந்த தோட்டத்திற்கு அழைத்துச் சென்ற அதிபர், அங்கே ஒரு சிறு செடியைக் காட்டினார்.'' தம்பி, இந்தச் செடியைப் பிடுங்கிப் போடு'' என்றார். ஒரு தயக்கமும் இல்லாமல் அச்செடியை சட்டென்று பிடுங்கி விட்டான் மாணவன். அடுத்து அதைவிடச் சற்றுப் பெரிய செடியைக் காட்டிப் பிடுங்கச் சொன்னார். அதையும் அவன் எளிதில் பிடுங்கிவிட்டான். பின்னர் அதைவிடச் சற்றுப் பெரிய செடியைக் காட்ட, அதையும் சற்றுச் சிரமப்பட்டுப் பிடுங்கினான். அவர் கடைசியாக ஒரு மரத்தைக் காட்டினார் "அப்படியே இதையும் பிடுங்கிப் போட்டுவிடப்பா'' என்றார். மாணவன் திகைத்தான். மரத்தை ஒரு தடவை ஏற இறங்கப்பார்த்தான். "என்ன சேர் விளையாடுறீங்களா? இவ்வளவு வளர்ந்த மரத்தை நான் எப்படிப் பிடுங்குவது?'' என்று கேட்டான்.

அதற்கு அதிபர் சொன்னார்:'' உன்னிடம் இருக்கும் கெட்ட பழக்கங்களும் அப்படித்தான். வளர்ந்து விட்டால் பிடுங்க முடியாது. பிறகு நீ தான் 'கஷ்டப்பட வேண்டும்''.!

அவரின் விளக்கம் மாணவனுக்குப் புரிந்தது. அவன் வாழும் வாழ்க்கை அவனுக்கு உறைத்தது. அன்றிலிருந்து அவன் தன் நடவடிக்கைகளை மாற்றி நல்வாழ்க்கை வாழ ஆரம்பித்தான்.

– அக்கரைசாமந்தி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவை ராசா கூடத்தில் இருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். மாலைநேரம் மெல்ல இருள் கவிந்து கொண்டிருந்தது. கண்ணாடி போட்டிருந்ததால் அந்நேரத்திலும் அவரால் வாசிக்கக் கூடியதாயிருந்தது. அவர் முன்பு உத்தியோகம் பார்த்தவர். தற்போது ஓய்வூதியம் பெறுபவர். பிள்ளைகள் குடும்பமாகி ஆளொரு பக்கமாக ஒதுங்கிவிட்டனர்!

மனைவியோடு நிம்மதியாக வாழ முயற்சித்துக் கொண்டிருப்பவர்! ஆனால் அம்முயற்சியிலும் இடறல்கள் இடைக்கிடை என்றாலும் ஏற்படவே செய்கின்றன.!

கூடத்தை அடுத்திருக்கும் அறையில் மனைவி படுத்திருந்தாள். பின்னேரம் ஒரு குட்டித்தூக்கம் போடுவது அவள் வழக்கம். அன்று உடல் அசதியால் கொஞ்சம் அதிகமாகவே தூங்கிவிட்டாள். கண்விழித்ததும் நிமிர்ந்து பார்த்தாள் கணவன் வாசிப்பில் மூழ்கியிருந்தார்.

"இங்காருங்கோ, இப்ப என்ன நேரம்? - நேரம் போய்விட்டது இன்னும் தேனீர் போடவில்லை. பரிமாறவில்லை என்ற ஆதங்கம் அவளுக்கு.

சிலுவைராசா மூக்குக் கண்ணாடியை சரிசெய்துகொண்டு, பத்திகையை ஒரு பக்கமாகப் போட்டுவிட்டு எழுந்த நாலெட்டு முன் நகர்ந்து சுவரின் மேலிருக்கும் மணிக் கூட்டைப்பார்த்தார். நேரம் இப்போ ஐந்தே முக்கால் என்றார். "உங்களுக்கென்ன இருந்த இடத்திலிருந்து நேரம் பார்க்க! கிட்டப்போயா பார்க்க வேணும்? இப்பவும் இளந்தாரிக்கு நடிக்கிறீர், கண்பார்வை நல்லாக் குறைஞ்சு போச்சுது! அவிஞ்ச கண்ணும் ஆக்களும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதற்குப் போய் இப்படி நையாண்டி பேசி நையப் புடைக்கிறானே! "அட, நம்ம பொஞ்சாதி சொல்லிப் போட்டாவே எண்டு நானும் சரியாக நேரம் சொல்ல வேணும் எண்டுதான் கிட்டப் போனன் சின்னப் பொடியங்கள் மாதிரி! அதுர தாற்பரியத்த உணராமல் என்னைத் திட்டித்தீர்க்கிறியே!" அவர் சினந்து கொண்டார். "ஓ இவர் பொண்டாட்டியில பெரிய அக்கறையுள்ளவர்! அது தான் நான் எத்தின நாளா இருமிக் கொண்டிருக்கிறன், பாமஸி போய் இருமல் மருந்து வாங்கித்தராம இருக்கிறார்?."

"அதுதான், என்ர அம்மா ஓமம் அதிமதுரம் மல்லி கண்டந்திப்பிலி பனங்கற்கண்டு என்று ஏதேதோ வெல்லாம் போட்டுத் காச்சி தந்தவ அல்லவோ? அதை நீர் தொடர்ந்து பாவிச்சிருந்தால் இப்ப ஏன் இரும வேண்டிவருகுது!"

"சும்மா சத்தம் போடாதீங்க" அந்த விசர்மனிசி தந்ததும் ஒரு மருந்தா? வருத்தம் கூடும்! பெண்டாட்டி இருமி இருமி செத்தாலும் பரவாயில்லை, காச இளக்க மனம் வராத நப்பிக் கூட்டங்கள்.!"

தாயைப்பழித்துரைத்தது அவரை தன்நிலையிழக்கச்செய்து விட்டது! பைத்தியக்காரன் போலானார்! "என்ன சொன்னாய் என்ர அம்மா விசரியா? உன்ர அம்மா என்ன திறமோ? எத்தினையோ பேரோட சுற்றித்திரிந்தவள் எண்டு எனக்கு தெரியும்.! சொல்லவா எல்லாம்? "

இந்தப் பேச்சைக் கேட்டு அவள் பதறியடித்து பத்திரகாளிபோலானாள்.! இவள் அவரின் குடும்பத்தினரை கேவலமாய் பேச, அவரும் விட்டுக்கொடுக்காமல் அட்டகாசமாய் இழித்துரைக்க, அன்று வீட்டில் பெரும் அமளிதுமளி நடந்தது. முடிவு.......! விபரீத நாடகம்தான்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவள் தேனீர் போடவுமில்லை; கொடுக்கவுமில்லை! இருவருக்கும் கதை பேச்சு இல்லை! ஊமை நாடகம் நடக்கத் தொடங்கியது!

இரவுச் சாப்பாட்டை வழமைபோல மனைவி பரிமாறவில்லை, அழைக்கவுமில்லை! இவரும் அந்த அன்பான அழைப்பை எதிர்பார்த்து ஏமாந்து போனார். "வாருங்கோ சாப்பிட! உங்களுக்கு பிடிக்குமென்று முட்டையும் பொரிச்சிருக்கு ...! இந்த அன்புக்குரல் காணாமல் போயிற்றே! அன்றிரவு அவர் சாப்பிடவில்லை படுக்கைக்கு போய்விட்டார்.! அவளும்தான் சாப்பிடாமலே படுக்கைக்குப் போய்விட்டாள்! இருவரும் கண்களை மூடினாலும் உறக்கம் கொள்ளவில்லை உள்ளம் குமுறிக் கொண்டே பேசிக்கொண்டிருந்தது!..... அவள்....... இவருக்கு தான் படிச்சவரெண்டு பெரிய நினைப்பு! ஆனால் ஆள் ஒரு கொதியர்! அற்பனுக்கெல்லாம் சுடுதண்ணி கால்ல பட்ட மாதிரி குதிப்பார்! நான் என்ன வம்பு தும்பாய் பேசின நானா, இவர் இப்பிடி கொதிச்சி குதிக்கிறதுக்கு? என்னில ஒரு பிழையுமில்ல, நான் இனி வலியப்போய் இவரோட கதைக்க மாட்டன். ஓ!"

அவர் "இவள் இப்படி எத்தினதரம் என்னை மட்டந்தட்டி இழிவு படுத்தி கதைச்சுப்போட்டாள்! படிக்கல்ல எல்லாத்திலயும் குறைஞ்சு போனன் எண்ட தாழ்வு மன்பபான்மை இவளுக்கு! இந்த தாழ்வு மனச்சிக்கலால, எவரையும் குறை கண்டு மட்டந்தட்டி கேவலமாகக் கதைச்சு, தன்னை உயர்த்தப் பார்க்கிறாள்! இதுவும் மன நோய் மாதிரிதான் என்ர மனைவியிர பலவீனம் வெளியில தெரிஞ்சா எனக்கும் தான் வெட்கம்! நானும் பெரிய தொனி வைச்சு அட்டகாசம் செய்து கதைச்சுப் போட்டன்!. எத்தின பேர் கேட்டு சிரிச்சாங்களோ தெரியாது! அவளும் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைவிடவில்லைத்தானே! நான் ஏன் புத்தி கெட்டு அவன்ற மனத புண்ணாக்கினன்? எனக்குப் பிடிக்கிற மாதிரித்தானே சமைப்பாள் எனக்கு பணிவிடை செய்து தானே தன் வாழ்க்கையை ஓட்டுகிறாள்! அவள்ற மனதை புண்படுத்தியிருக்கப்படாது! விடியட்டும்!"

விடிந்ததும் விடியாததுமாக விழித்தெழுந்தார் சிலுவைராசா! மனைவியின் படுக்கையண்டை போனார். அவளும் கண்மலர்ந்துதான் இருந்தாள்! "நான் அப்படி எல்லாம் உம்ம கேவலமாப் பேசியிருக்கக்கூடாது. என்ற பிழைய பொறுத்துக் கொள்ளும், மன்னிச்சிக்கொள்ளும்!" அவர் உரைகேட்டு பதிலுரைக்க அவளுக்கு நாவரவில்லை! கண்ணீரே வழிந்தது!

இந்தப் பிரச்சினைக்கு மூல காரணமே அவள் தான்! அவள்தான் ஆரம்பித்துவைத்தாள், பெரிதாக்கினாள்! என்றாலும் படித்த பண்பான அவர் தன்னையே குற்றங்களுக்குப் பொறுப்பாக்கி பாவமன்னிப்புக் கேட்டு பெருந்தன்மையோடு நடந்து இனிய இல்லறத்துக்கு வழிஏற்படுத்திவிட்டார்!

அன்று அந்த அதிகாலை வேளையில் அவள் கணவனுக்கு முட்டைக் கோப்பி கொடுப்பதற்காக முட்டையடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

**ஆக்கம் :- சூசை எட்வேட்**

## குடும்பம் உருவான வரலாறு

எகிப்திய பழமைவாய்ந்த கலாசாரப் பின்னணியில் ஒருகதை சொல்வார்கள். கடவுள் அல்லது கடவுளர் மனிதனை ஒரு உருண்டை வடிவில் படைத்தார்கள். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் என்றோ பெண் என்றோ இருக்கவில்லை. இதில் இரு முகங்கள், நான்கு கைகள், நான்கு கால்கள், ஆனால் ஒரு தலை இருந்தன. இது ஆண், அல்லது பெண் என்று இருக்கவில்லை அதேவேளை மனிதன் அசாதாரண அறிவைப் பெற்றிருந்தது. ஆனால் காலப்போக்கில் இந்த படைப்பு தனது அறிவுத் திறமையால் கடவுளருக்கே சவாலாக உருவாகியது இதனால் பொறாமைகொண்ட கடவுளர் தமது படைப்பை இரண்டாகப் பிரித்து விட்டனர். அன்றிலிருந்து பிரிந்த இருவரும் தம்மைத் தேடும் படலமே ஆண் பெண் உறவிற்கான அடித்தளம் என்று இக்கதை கூறுகின்றது இவ்வாறு ஓர் ஆண் ஒரு பெண்ணைச் சந்தித்தால் அல்லது ஒரு பெண் ஓர் ஆணைச் சந்தித்தால் “இவர் எனது ஜோடியோ?” என்று எண்ணத் தோன்றும். இதுவே ஆண்-பெண் உறவுக்கு இட்டுச் செல்கின்றது என்கிறது எகிப்திய பின்னணியில் வரும் இந்தக் கதை.

திருமணம், திருமண உறவு பாலியல் என்ற பல பதங்களை நாம் அடிக்கடி வாழ்வில் பயன்படுத்துவதுண்டு. திருமணம் பற்றிய தன் கருத்தை இந்த உலகம் காலத்துக்குக் காலம் மாற்றி வருகின்றது. இதற்கு மக்களின் மனநிலை, கலாசாரப் பாதிப்புகள், சமயங்களின் நெகிழ்வுத் தன்மைகள். அரசியல்வாதிகளின் சுயநலப் போக்கு போன்ற பல காரணிகளை முன்வைக்கலாம். இன்று திருமணம் எனும் ஒப்பந்தம் தேவைதானா என்று கேட்கும் அளவிற்கு பல மேற்கத்தைய நாடுகளின் சிந்தனைகள் மாறிவிட்டன. அதற்கு அந்த நாடுகளின் சட்டங்களும் இடமளிக்கின்றன. இந்த பின்னணியில் ஒரு கவிஞர் இவ்வாறு கூறினார்.

நேற்றைய சிந்தனை: நாம் இருவர் நமக்கிருவர்.
இன்றைய சிந்தனை: நாம் இருவர் நமக்கொருவர்.
நாளைய சிந்தனை: நாம் இருவர் நமக்கெதற்கு இன்னொருவர்?
எதிர்கால சிந்தனை: நான் ஒருவர், எனக்கெதற்கு இன்னொருவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு திருமண பந்தமே வேண்டாம் எனும் மனநிலை உலக மக்களிடையே உருவாகி வருவது வெள்ளிடைமலை. ஏனெனில் திருமணம் என்றால் ஒரு ஒப்பந்தத்தினுள் ஒருவர் அடுத்தவரோடு நுழைய வேண்டும் இதில் கடமைகள், பொறுப்புகள் என்று பல. சமூகம் விதித்த இந்த சட்டங்களிலிருந்து இலகுவாக விடுபடவோ, வெளியேறவோ முடியாது. எனவே திருமணம் செய்யாமலேயே இருந்துவிடுவது நல்லது எனும் நிலைப்பாடு. இதற்கு கலாசார சீர்கேடுகளும், தமது சமயங்களில் பற்றற்ற நிலையும், தனிமனித சுதந்திரத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமும், தனிநபர் மனநிலைகளும் சில காரணிகளாகும். எனவே மனித சரித்திரத்தில் திருமணம் பற்றிய சிந்தனை எழக் காரணமாயிருந்த சில விடயங்களை இந்தக் கட்டுரையில் ஆராயலாம் என எண்ணுகிறேன்.

**மனித சரித்திரம் தரும் சிந்தனை.**

இன்றைய உலகில் தொடர்பு சாதனங்களின் அபரித வளர்ச்சியின் காரணமாக யாராலும் எந்த விடயங்களுக்கும் விளக்கம் பெற்றுக்கொள்ளலாம் எனும் நிலை உள்ளது. ஆனால் மனித சரித்திரத்தில் பிரசித்திபெற்ற கலாசாரங்கள் ஆண், பெண் உறவு பற்றி பல விளக்கங்களை கதைகளாகக் கூறிவந்ததுள்ளன.

எகிப்திய சரித்திர, கலாசாரம் கலந்த விளக்கம் எம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. இதேபோல கார்ல் ஜுங் எனும் தத்துவயியலாளர் கூறுவார்: ஒவ்வொரு ஆணினுள்ளும் 10 முதல் 20 வீத பெண்ணின் தன்மைகள் உள்ளன. அதேபோல ஒவ்வொருபெண்ணினுள்ளும் 10 முதல் 20 வீத ஆணின் தன்மைகள் உள்ளன. இது இருவருக்குள்ளும் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது என்பார் கார்ல் ஜுங். இதே சிந்தனையை சீன பாரம்பரியமும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று திருமணம் என்னும் சிந்தனைக்கு உலகம் இடம் கொடாமல் தனி மனித சுதந்திரத்திற்கு அதிக முன்னுரிமை கொடுப்பதால் உடல் இச்சைகளை அல்லது ஆசைகளை தீர்க்க மனிதர் வேறுவழிகளையும் கையாளத் தொடங்கிவிட்டனர். கூடிவாழுதல், ஓரின சேர்க்கை போன்ற செயற்பாடுகளில் அதிக நாட்டம் கொள்ளத் தொடங்கி விட்டனர். இதில் இரு விடயங்களை நாம் நோக்கலாம்.

1 தமது விருப்பம்போல தம் உடல் ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.
2 குடும்பம், பிள்ளைகள் எனும் கட்டுப்பாடோ, பொறுப்போ இவர்களுக்கு இல்லை.

ஆயினும் ஒருவரின் முழு மனித வளர்ச்சியிலே நல்ல குடும்பத்தின் பின்னணி மிகவும் அவசியமாகின்றது. திருமணத்தில் இணையும் ஆணும் பெண்ணும் உடல் உறவோடு மட்டும் திருப்திப்பட முடியாது. உடலுறவு இதில் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அதையும் கடந்து அன்பைப் பகிரும் மக்களாக இவர்கள் வாழ முன்வர வேண்டும். உடலுறவை மட்டுமே அல்லது உறவு கொள்ள முடியாதளவிற்கு சூழ்நிலை அமைந்தால் அல்லது வயது முதிர்ந்தால் இவர்கள் விவாகரத்திற்குத்தான் செல்ல வேண்டும். திருமணம் செய்த ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும் அன்பின் வெளிப்பாட்டின் உச்சமாகவே திருமண உறவு அல்லது உடலுறவு அமையும். அதுவே உண்மையான அன்பு. அன்பின் வெளிப்பாடு. இதுவே திருமண அன்பு. ஏனைய உறவுகள் எல்லாம் சுயநல செயல்பாடுகளாகவே அமைந்துவிடும்.

எனவே திருமணமான கணவனும் மனைவியும் உடல் ஆசைகளையும் கடந்து ஒருவருக்கொருவர் துணையாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். விவிலியத்தில் கடவுளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல" என்று அவனுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார் என்று வாசிக்கிறோம். இருவரையும் இணைத்த கடவுள் "இனி இவர்கள் இருவரல்ல, ஒரே உடல் என்றார். திருமணம் பற்றிய விவிலியப் பின்னணியை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

— அருட்திரு நோயல் இம்மானுவேல். —

## குடும்பம் - ஒரு சமுதாயத்தின் இதயம்

தினமும் பத்திரிகைகளைத் திறந்தால் நம் முன் விரிந்து கிடக்கும் பரபரப்பான செய்திகளின் ஒட்டு மொத்தமான சுருக்கம் 'நாட்டிலும், வீட்டிலும் றோட்டிலும் அமைதி இல்லை' என்பதே நாட்டில் உள்ளவர்களும் றோட்டில் உள்ளவர்களும் ஏதாவது ஒரு வீட்டை (குடும்பத்தை) சேர்ந்தவர்கள்தான். அவ்வாறாயின், குடும்பத்தில் அமைதி இல்லை என்றால் சமுதாயத்தில் அமைதியின்மையாக அது நிச்சயம் வெளிப்படும். அதனால்தான் குடும்பமே "சமுதாயத்தின் இதயம்" என அழைக்கின்றனர். உடலுக்கு இதயம் எவ்வாறு முக்கியமானதோ, அவ்வாறே குடும்பமும் சமுதாயத்துக்கு முக்கியமானது.

ஒவ்வொரு சமுதாயத்திலும் அற்புதமான குடும்பங்களும் உண்டு. அலங்கோலமான குடும்பங்களும் உண்டு. அலங்கோலமான குடும்பங்களில் எப்போதும் சண்டை, தகராறு, அடிதடிவாழ்வு, கணவன் குடிபோதையில் இருப்பது, மனைவி ஓயாது தொலைக்காட்சிப் பெட்டியின் முன் பிள்ளைகளும் கட்டுப்பாடற்ற, கண்டிப்பற்ற ஊதாரித்தன வாழ்வு. இக்குடும்பத்திற்கும் மற்றவர்களுக்கும் உறவு கிடையாது. மற்றவர்கள் இவர்களோடு பேசுவதற்கும், பழகுவதற்கும் பயப்படுவார்கள். அற்புதமான குடும்பங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும், பண்பும், புரிந்து கொள்ளுதலும், இலக்குத்தெளிவும், ஆழமான இறை நம்பிக்கையும் இருக்கும்.

குடும்பம் இறைவனின் உன்னத படைப்பு. விலைமதிப்பற்ற சொத்து. "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்.........கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்".கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்".(தொ.நு.1:26-27)என்று மறைநூலில் காண்கிறோம்.

இறைவன் மனிதரைப் படைக்கும் பொழுதே அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்து குடும்பம் என்ற அமைப்பிற்கு அடிகோலினார். ஆணும் பெண்ணும் ஒரு குடும்பமாகி வாழ்ந்து, ஒருவரை மற்றவர் அன்பு செய்து அதன் விளைவாகக் குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்து வாழ்வதே இறைவனின் திருவுளமாகும்

குடும்பங்களுக்கெல்லாம் மாதிரியான குடும்பங்களாக சில குடும்பங்கள் மறைநூலில் காட்டப்பட்டுள்ளன. ஆயினும் அனைத்திலும் மேலான எடுத்துக்காட்டு திருக்குடும்பமே. அதுவே யோசேப்பு, மரியா, இயேசு வாழ்ந்த புனிதக் குடும்பம். இக்குடும்பத்தில் இறைநம்பிக்கை மிளிர்ந்தது. செபம் ஜெயமாக மாறியது. அதன் வழியாக இறையனுபவம் நிறைந்தது. அன்புறவு மலர்ந்தது. தியாகம் வளர்ந்தது. அமைதி நிலவியது. மன்னிப்புக்கு வழிவகுத்தது. அயலவர்மேல் அக்கறை கொண்டிருந்தது. அதனையே மூல முன்மாதிரியாக கொண்டு வாழ்ந்திடுவோம்.

கணவன் மனைவியரிடையே உள்ள உறவில் விரிசல்கள் ஏற்பட்டால் அக்குடும்பத்தில் அமைதி குலைந்து விடுகிறது. அவற்றிற்கு பல காரணிகள் இருக்கலாம். அவற்றில் முக்கியமானது சந்தேகம். ஒரு மனைவி பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பட்டார்: "ஒரு கணவன் குடிகாரனாக இருந்தாலோ, கொலைகாரனாக இருந்தாலோ, பிச்சைக்காரனாக இருந்தாலோ, அவனுடன் வாழந்துவிடலாம். ஆனால் அவன் சந்தேகக்காரனாக இருந்தால், அவனோடு வாழ்வது நரகம்தான;". ஆம் இது நூற்றுக்குநூறு வீதம் உண்மையானது. இது இருசாராருக்கும் பொருந்தும். கால் பட்டால் குற்றம் கைபட்டால் தீட்டு என்ற நிலை குடும்பங்களில் எழவே கூடாது. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத சூழல், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளாத சூழல், ஒருவரை ஒருவர் மன்னித்து மறக்காத சூழல் உருவாகும்போது அக்குடும்பத்தில் பூகம்பம் உருவாகி வெடித்துச் சிதறும் நிலை வரலாம்". தான் என்னும் உணர்வும் (EGO CENTRICISM) தன்னலம் என்னும் தீய ஆவியும் ஒருவரை ஆட்கொள்ளும்போது மற்றவருடைய நிலை நெருஞ்சி முள்ளில் நடப்பது போன்றுதானிருக்கும்.

விரிசல்கள் ஏற்படுவதைத் தடுக்க மாற்று மருந்துகள் உண்டு. புனித பவுல் அவற்றை வரிசைப்படுத்துகின்றார்: "அன்பு பொறுமையுள்ளது நன்மை செய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது. இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம் கொடாது. தீங்கு நினையாது. தீவினையில் மகிழ்வுறாது. மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும், அனைத்தையும் நம்பும். அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்"(1கொரி 13:4-7)

ஒருவர் ஒருவரை வார்த்தைகளால் புண்படுத்துவதைத் தவிர்த்து, ஒருவர் மற்றவரிடம் குறைகாண்பதைத் தவிர்த்து ஒருவர் மற்றவரைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றி அவரைத் தலைகுனியச் செய்யும் விடயங்களைத் தவிர்த்து, ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவரை குறைகளோடும் நிறைகளோடும் ஏற்றுக்கொள்ளும் போது அங்கு அமைதி ஏற்படுகின்றது. ஒருவரை மற்றவர் சுமையாகக் கருதாமல், அவர் இறைவன் எனக்குத் தந்த சொத்து, வாழ்க்கைத் துணை, நான் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்" (தொ நூ 2:23), ஆண்டவரின் சாயல் என ஏற்றுக் கொள்ளும்போது உங்கள் அன்புக்கரம் அவரை அரவணைக்க நீண்டு போகும். உறவுப் பூக்கள் உயிர்பெற்று எழுந்து விட்டால் ஓயாமல் வளர்ந்து கொண்டிருக்கும். மண முறிவுகள் மடிந்து போகும்.

அமைதியைப்பற்றி பேசுகிறோம். குடும்பத்தில் அமைதி இன்றி சமுதாயத்தில் அமைதி எப்படி உருவாக முடியும்? முதலில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவது குடும்பத்தில்தான். உதாரணம் சிசுக்கொலை (ABORTION) அது நேரடியாகக் கொலை. தாயினால் மேற்கொள்ளப்படும் கொலை. கணவனும் மனைவியும் இருவரும் விரும்பியோ அல்லது ஒருவரது விருப்பத்தினாலோ கொலை இடம் பெறுகிறது. எமது பெற்றோர் எமக்கு அப்படி செய்திருந்தால் நாம் இன்று இங்கு வாழ்ந்திருக்க மாட்டோம். எனவே குழந்தைகள் இறைவன் எமக்குத் தந்த செல்வங்கள், சொத்துக்கள் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் முதற்கண் உணர வேண்டும்.

அதற்கேற்றவாறு அவர்களை கிறிஸ்தவ விழுமியங்களுக்கேற்ப வாழ பயிற்சியளிக்க வேண்டும். "செபமில்லாத வீடு செத்தவனின் வீடு", "குடும்பமாக செபிக்க, குடும்பமாக இறைவார்த்தைப் பகிர்வில் ஈடுபட கற்றுக்கொடுக்க வேண்டும். தாயும் தந்தையும் தங்களுடைய பிள்ளைகளுக்காக வாழ வேண்டும். பிள்ளைகள் தங்களின் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அவர்களின் நல்வாழ்விற்காக வாழ வேண்டும். அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு அன்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் குடும்பம் அன்புறவின் குடும்பமாகும். அன்புறவே அமைதியின் வெளிப்பாடாகும்.

தியாகமில்லா வாழ்வு உப்பு இல்லாத உணவிற்குச் சமம். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே. அது போல தியாகமில்லாக் குடும்பம் தெருவிலே. தியாகம் என்பது இழப்பு. குடும்பத்திற்காக தன்னையே இழப்பது, தன்னையே அழித்துக் கொள்வது, தன்னையே ஒறுத்துக்கொள்வது, சுயநலம், ஆணவம், அதிகாரம்; அகங்காரம் தற்பெருமை ஆகியவற்றை இழந்து அன்பு, பகிர்வு, அரவணைப்பு போன்ற வற்றைக் கடைப்பிடித்து வாழ்வதே தியாகவாழ்வாகும். தியாக வாழ்வு வாழும் குடும்பங்கள் தெய்வீகக் குடும்பங்கள் என்றால் அது மிகையாகாது.

இத்தகைய நற்பண்புகள் விளங்கும் குடும்பங்கள் நான்கு சுவர்களுக்குள் ஒளிந்து கொள்ளாமல் குன்றின்மேல் ஏற்பட்ட தீபம் போல் ஒளிர வேண்டும். அப்போதுதான் குடும்பங்கள் சமுதாயத்தின் இதயமாக விளங்க முடியும். "யான் பெற்ற இன்பம், பெறுக இவ்வையம்" என்ற பரந்த மனப்பான்மையுடன் நல்ல விழுமியங்களுக்கு நற்சான்று பகரும் போது அது புளிப்பு மாவைப்போன்று சமுதாயத்தை படிப்படியாக, மறைமுகமாக மாற்றி விடுகின்றது. இதுவே இன்றைய எம் நாட்டுக்கு இன்றியமையாததாக கருதப்படுகின்றது.

யுத்தம் ஓயந்தாலும் அதனால் ஏற்படுத்தப்பட்டவடுக்கள் மறையவில்லை ஒப்புரவை ஏற்படுத்த வேண்டிய மதங்கள் கூட மௌனமாகி விட்டன. காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்கள் எதுவுமின்றி விரக்தியுடன் இருப்பவர்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களில் வாழ்பவர்கள் இவர்களின் வாழ்வில் இருள் நீங்கி ஒளி பிறக்காதா என்ற ஏக்கம் எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாட்டவில்லையா? இதனால் எமது இதயத்துடிப்பு அதிகரிக்கவில்லையா? என்ன செய்யப்போகின்றோம்.? காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக்காண ஏதாவது செய்ய முடிவெடுப்போம்.!

**மேதகு பொன்னையா யோசப் ஆண்டகை**

**துணை ஆயர்**

## வாழ்வின் மேடு பள்ளங்களை கடப்பது எப்படி?

### பதில் கூறுகிறது ஒரு புத்தகம்




வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வருவது தான் வாழ்க்கை. சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம். அவற்றை எப்படி எதிர்கொள்வது? தோல்வியின் போது மனமுடைந்து போகாமலும், வெற்றி கிடைத்தால் அது நிரந்தரம் என்று நினைத்து கர்வம் அடையாமலும் வாழ்க்கையைப் பயணத்தை தொடர்வது எப்படி?

இக் கேள்விகளுக்கு பதில் தருகிறது அண்மையில் வெளிவந்த ஒரு புத்தகம். “சிகரங்களும் பள்ளத்தாக்குகளும்” (PEAKS AND VALLEYS) என்ற இந்த உளச்சார்பு நாவலை எழுதியிருப்பவர் ஸ்பென்சர் ஜோன்சன் என்ற மனவளக்கலை நிபுணர். இதற்குமுன்னால் WHO MOVED MY CHEESE என்ற மன நல ஆற்றுப்படுத்தல் கலையில் இதுவரை யாரும் தொடாத மிருதுவான பக்கங்களை விரித்துக்காட்டி எழுதிய புத்தகத்தின் மூலம் உலகப் புகழ்பெற்றவர். அதே வரிசையில் கதை ரூபத்தில் வாழ்வியல் தத்துவங்களை புரியவைக்கும் சுவாரஸ்யமான நாவலாக இப்புத்தகத்தை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவிகளும், நதிகளும் சோலை வனங்களும் நிறைந்து பார்க்குமிடமெல்லாம் பசுமை கோலோச்சும் அழகிய பள்ளத்தாக்கு அது. அங்கே தொழில் புரியும் ஓர் இளைஞனைக் கதாநாயகனாகக் கொண்டது இக்கதை.

அவன் பிறந்து வளர்ந்தது எல்லாமே இந்தப்பள்ளத்தாக்கில் தான். ஆனால் அவனுக்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. தூரத்தில் தெரியும் மலைமீது ஏறி அதன் சிகரத்தை தொட ஆசைப்படுகிறான்.

அந்த மலையின் உச்சியில் நின்று உலகத்தையே வெற்றிகொண்டுவிட்ட அக்களிப்பில் எக்காளமிட வேண்டும்;

அந்த அறைகூவல் பள்ளத்தாக்கின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலிக்க வேண்டும் உலகமே தன்னைநிமிர்ந்து பார்க்க வேண்டும். அதன்பின் தன் வாழ்வே ஆனந்த மயமாக மாறிவிடுமென்று கனவு காண்கிறான்

அவன் தனது இந்த ஆசை, இலட்சியம் குறித்து தன் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் பேசுகிறான். ஆனால் அவர்கள் அனைவரும் அவனைக் கேலி செய்கின்றனர்.

"உனக்கென்ன பைத்தியமா? நமது பள்ளத்தாக்குக்கு என்ன குறைச்சல்? இங்கே இல்லாத வளமா, வசதிகளா? பிறகேன் நீ அந்த மலைக்குப் போக ஆசைப்படுகிறாய்? பள்ளத்தாக்கில் இறங்கிப் போவது போல் இலகுவான பயணம் அல்ல மலையில் ஏறுவது? அங்கே ஒவ்வொரு அடிக்கும் ஆபத்துகள் காத்திருக்கின்றன. தவறி வீழ்ந்தால் எலும்புகள் கூடத்தேறாது. அதில் ஏறி உயிரைப்பறிகொடுப்பதை விட இங்கேயே நிம்மதியாய் இருந்து விடலாம். நாங்கள் சொல்வதைக்கேள்! "என்று அறிவுரையும் கூறுகின்றனர். எவர் என்ன சொல்லியும் அந்த இளைஞனின் மனம் மாறவில்லை நான் மலை ஏறியே தீருவேன் என்று உறுதியாக தன் பயணத்தைத் தொடர்கிறான்.

சின்ன வயது முதல் பள்ளத்தாக்கில் வளர்ந்த அவனுக்கு மலை ஏறுவதில் பழக்கமிருக்கவில்லை. ஒவ்வோர் அடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறுகிறான். பல இடங்களில் சறுக்கி விழுந்து காயமும் படுகிறான். ஆனால் உச்சியைஅடையும் அவனது இலட்சியத்துக்கு முன் அவை ஒரு பொருட்டாக அவனுக்கு தெரியவில்லை. பிடிவாதம் கொஞ்சம் கூடக் குறையவில்லை எப்படியோ முக்கிமுனகியும், தவழ்ந்தும், ஊர்ந்தும் தட்டுத்தடுமாறி மலை உச்சியை அடைகிறான் அங்கே சித்தர் ஒருவரை அவன் சந்திக்கிறான். அவர் மலைகள் பற்றியும், பள்ளத்தாக்குகள் பற்றியும் பல உண்மைகளை அவனுக்கு எடுத்துக் கூறுகிறார். இது தான் கதைச் சுருக்கம். சித்தர் சொன்ன உண்மைகள், அதாவது வாழ்க்கை கூறும் தத்துவங்கள் இதோ உங்கள் பார்வைக்கும் தரப்படுகின்றன........

உலகில் எங்குபார்த்தாலும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் மாறிமாறிவரும். அது தான் இயற்கை. நமது வாழ்விலும் அப்படித்தான். ஒன்று மாறியொன்று அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும். இதைப்பற்றி வருந்திப் புலம்பி பிரயோசனமில்லை. இதுதான் யதார்த்தம் என்று ஏற்றுக்கொண்டு வாழப்பழக வேண்டும்

நம்மிடம் இருப்பதைக்கொண்டு மகிழ்ச்சியடையும் போது மலை ஏறுகிறோம். இல்லாததை நினைத்து வருந்தும்போது பள்ளத்தாக்கில் வீழ்கின்றோம். ஆகவே உங்களை எப்போதும் அடுத்தவருடன் ஒப்பிட்டு என்னிடம் அது இல்லையே, ,இது இல்லையே என்று புலம்பிக் கொண்டிருக்காதீர்கள். வாழ்க்கை உங்களுக்குத்தந்திருக்கும் அடுத்தவரிடமில்லாத அற்புதமான கொடைகளை எண்ணி ஆனந்தமடையுங்கள். நமக்குக் கிடைத்திருக்கும் அடுத்தவருக்கில்லாத வாய்ப்புகளை பற்றிக் கொண்டு வாழ்வின் உச்சத்தினைத் தொடப்பாருங்கள் எவ்வளவு மோசமான சரிவிலும், வீழ்ச்சியிலும் நிச்சயமாக ஏதாவதொரு நல்ல விஷயம் இருக்கும். அதை நாம் புரிந்து கொண்டு செயற்பட்டால் நமது பள்ளத்தாக்குகளைக் கூட மலைச்சிகரங்களாக மாற்றிவிடலாம்.

வெற்றியடைந்தவர்கள், இனி யாராலும் தங்களை எதுவும் செய்ய முடியாது என்று செருக்கோடு, அல்லது அதீத நம்பிக்கையோடு நினைக்கிறபோதுதான் மலையுச்சியிலிருந்து தடுமாறி கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுகிறார்கள். உங்கள் வாழ்க்கையில் அந்தக்கர்வத்துக்கு இடம் கொடுக்காதீர்கள். எப்போதும் விழிப்பாக இருங்கள். அப்போதுதான் மலையுச்சியில் அதிக நேரம் தங்க முடியும்.

அதேபோல பள்ளத்தாக்கில் இருப்பவர்கள் "இனிமேல் இது தான் என் வாழ்க்கை; இதுவே எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று திருப்தியடைந்து விட்டால் எல்லாமே போயிற்று! அதன் பிறகு அவர்கள் எந்த மலைமீதும் ஏறமுடியாது: வாழ்க்கையிலும் முன்னேற முடியாது.

பல சமயங்களில் பயம்தான் நம்முடைய முக்கிய பல வீனம். அந்தப் பயமென்ற பள்ளத்தாக்கைக் கடந்து விட்டால், பின்னர் எந்த மலையிலும் ஏறிவிடலாம். என்னால் முடியுமா என்று யோசித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் என்னால் ஏன் முடியாது என்று யோசித்து உற்சாகத்துடன் செயல் படுவது புத்திசாலித்தனம்.

அதன் பின்னர் மலையை நிமிர்ந்து பாருங்கள். அதன் உச்சியில் நீங்கள் ஏறி நிற்கும்போது எவ்வளவு பெருமையாக உணர்வீர்கள் என்பதை மனதிற்குள் கற்பனை செய்து பாருங்கள். பின்னர் அந்தக் கற்பனைக் குதிரையே உங்களை முன்னே வழிநடத்திச் செல்லும் மலையுச்சிக்கும் கொண்டு செல்லும்.

இப்படி மலைகள் பள்ளத்தாக்குகள் பற்றி நிறைய விஷயங்களை அந்தச் சித்தரிடமிருந்து தெரிந்தும் கொள்ளும் இளைஞன் முன்பைவிட பல மடங்கு உற்சாகத்துடன் மலையுச்சியிலருந்து இறங்கி வருகிறான். பின்னர் மலையில் கற்றுக்கொண்ட விடயங்களை வாழ்க்கையில் பயன்படுத்தி வெற்றிபெறுகிறான்.

வெறும் நூறு பக்கங்களை கொண்ட ஒரு சின்ன நாவல் இது. கையிலெடுத்தால் ஒரே மூச்சில் படித்து முடித்து விடலாம். அவ்வளவு விஷயங்களும் விறுவிறுப்பும். படித்தால் பள்ளங்களில் துவண்டு போய் உட்கார்ந்து விடாமலும், மலையுச்சிகளில் இருக்கும் போது தலைக்கனத்தில் ஓங்கிவிடாமலும் அது உங்களைக் காப்பாற்றும் !

- எஸ் ஜோன்ராஜன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org